# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை :திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:** 10/மா/2025

**நாள்: 13.04.2026**

கோ. கோவிந்தராஜ்
சென்னை–83 --- முறையீட்டு மனுதாரர்

(1) மண்டல அலுவலர், மண்டலம்–10
பெருநகர சென்னை மாநகராட்சி

(2) தாளாளர் / செயலாளர்,
GRT மெட்ரிக்குலேஷன்
மேல்நிலைப் பள்ளி, சென்னை --- எதிர்மனுதாரர்கள்

சென்னை–600 083, அசோக்நகர், 15–வது தெரு, கதவு எண் 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவரின் 06.11.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.11.2024 அன்று பெறப்பட்டு 10/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும்ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை–600 083, அசோக்நகர், 15–வது தெரு, கதவு எண் 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவர் தனது 06.11.2024 நாளிட்ட மனுவுடன் இணைத்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு முகவரியிட்ட 29.05.2023 நாளிட்ட மனுவின் நகலில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

> “நான் வசிக்கும் வீட்டிலிருந்து சுமார் 200 மீட்டர் தொலைவில் கதவு எண் 76, 7 வது அவுன்யூ, அசோக் நகர், சென்னை–83 முகவரியில் சுமார் தளம் ஒன்றுக்கு 15 ஆயிரம் சதுரடி என ஐந்து தளத்தில் கட்டிடம் கட்டப்பட்டு GRT மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி பல ஆண்டுகளாக இயங்கி வருகிறது. இக்கட்டிடத்தின் பின்புறம் அசோக் நகர் Slum Road 31வது தெரு இருந்தது. அத்தெருவை ஆக்கிரமித்து இக்கட்டிடம் கட்டப்பட்டதால் இவ்வழியே பயன்படுத்த முடியாமல் மனுதாரராகிய நானும் இப்பகுதி மக்களும் பல்வேறு சிரமத்திற்கு ஆளாகி வருகிறோம். அத்தெருவின் வரைப்படம் பின்புறம் இணைப்பு. Name of the Road streets List பின்புறம் இணைப்பு. மேலும் இப்பள்ளி கட்டிடத்திற்கு முன் சென்னை மாநகராட்சி நடைபாதை ஆக்கிரமித்து சுமார் 15 அடி அகலம் 100 அடி நீளம் 10 அடி உயரத்தில் ராட்சித இரும்பு ராடுகள் தரையில் அமைத்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதை பின்புறம் இணைக்கப்பட்ட புகைப்படங்களில் காணலாம். இதனால் பாத சாரிகள் நடைப்பாதையை பயன்படுத்த முடியாமல் நடுச்சாலையில் நடந்து சென்று விபத்துக்குள் ஆளாகிறார்கள். மேலும் இக்கட்டிடத்தில் பார்க்கிங் வசதி இல்லாததால் வாகனங்களை சாலைகளில் நிறுத்தி போக்குவரத்து நெரிசல் ஏற்படுத்துகிறார்கள். ஆகவே CMDA வழங்கிய வரைப்படம் NOCC ரத்து செய்து போர்கால அடிப்படையில்

ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவிடக்கோரி தன் நலன் பொது நலன் கருதி இம்மனு அளிக்கிறேன். மேலும் இப்பள்ளி கட்டிடம் இயங்கும் நிலத்திற்கு அசோக் நகர் 7th Avenue சாலையில் தான் முன்பகுதி ஆகும். 6th Avenue சாலையில் ராட்சத Gate அமைத்து, கட்டிடம் உள்ளே சென்று வரும் வழி பயன்படுத்தி வருகிறார்கள். 7th Avenue சாலையில் வழி அமைக்க தெரிவித்துக் கொள்கிறேன்.''

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 13.01.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 06.02.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 22.01.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன் செயற்பொறியாளர் தனது 05.02.2026 நாளிட்ட கடிதம் ம.அ10 ந.க. எண் 135–02–262/2026–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:

> ''திரு. கோவிந்தராஜ் என்பவரின் 06.11.2024 நாளிட்ட முறையீட்டு மனு சம்பந்தமான விசாரணை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 06.02.2026 அன்று நடைபெற உள்ளது. எனவே, விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் விளக்கம் அளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
>
> மேற்கண்ட 6வது அவென்யூவில் உள்ள GRT பள்ளி வாசலில் நடைபாதையில் தோட்ட வேலி ஆக்கிரமித்து கட்டியிருப்பதாக தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் கள ஆய்வு செய்யப்பட்டது.
>
> இதுகுறித்து தெரிவிப்பது யாதெனில், மேற்கண்ட புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள GRT பள்ளி வாசலில் நடைபாதையில் தோட்ட வேலி ஆக்கிரமித்து கட்டப்பட்டதை பணியாளர்களால் அகற்றப்பட்டது என்பதும் அதற்குண்டான புகைப்பட ஆதாரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதும் தங்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.''

5. மனுதாரர் தனது 02.02.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

> ''முறையீட்டு மனு எண் 10/மா/2025 வருகின்ற 06.02.2026 அன்று தங்கள் விசாரிக்க அளிக்கப்பட்ட சம்மன் இம்மனுவுடன் இணைப்பு.
>
> Case 2, மனு எண் 09/மா/2025 வருகின்ற 06.02.2026 அன்று மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் நேரடியாக விசாரிக்க அனுப்பப்பட்ட சம்மன்கள் இம்மனுவுடன் இணைப்பு. இதுவரை ஆக்கிரமிப்புகளை அகற்றவில்லை. வருகின்ற 13.02.2026 அன்று எனது மகளுக்கு திருமணம் நிகழ்ச்சி உள்ளதால் நான் பத்திரிக்கை கொடுக்கும் பணிகளாலும் திருமண ஏற்பாடுகள் செய்து வருவதாலும் 06.02.2026 அன்று நேரடியான விசாரணைக்கு வரமுடியாத நிலை உள்ளதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஐயா, அவர்கள் ஏற்றுக் கொண்டு அடுத்த மாதம் ஏதேனும் ஒரு தேதியில் விசாரணைக்கு ஆஜராக அழைப்பாணைகள் அளிக்கும்படி தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

6. முதல் எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் இளநிலை பொறியாளர் 06.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள 6வது அவென்யூவில் உள்ள GRT பள்ளி வாசலில் நடைபாதையில் தோட்ட வேலி ஆக்கிரமித்து கட்டியிருப்பதாக தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் கள ஆய்வு செய்யப்பட்டது. இது குறித்து தெரிவிப்பதுயாதெனில், மேற்கண்ட புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள GRT பள்ளி வாசலில் நடைபாதையில் தோட்ட வேலி ஆக்கிரமித்து கட்டப்பட்டதை பணியாளர்களால் அகற்றப்பட்டது என்பதும், அதற்குண்டான புகைப்பட ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் விளம்பர பலகை அகற்ற பள்ளி நிர்வாகம் ஒரு வார கால அவகாசம் கோரியுள்ளது. CMDA approval-படி மேற்கண்ட பள்ளிக் கட்டிடம் அமைந்துள்ளதா என்பது குறித்து கள ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்."

7. இரண்டாம் எதிர்மனுதாரர் GRT மகாலட்சுமி வித்யாலயா மேல்நிலைப்பள்ளியின் சார்பாக அலுவலக உதவியாளர் 06.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"பொதுப் பாதையை எங்கள் பள்ளி உபயோகத்திற்காக, நாங்கள் ஆக்கிரமிப்பு செய்யவில்லை. மாணவர்களின் பாதுகாப்புக்காகவும், பெற்றோர்கள் நலனுக்காகவும், மின்சாரக் கம்பியை மூடுவதற்காகவும் பள்ளியின் முன்பு கம்பி வேலியிட்டு அதை சரியாக நாங்கள் பராமரித்து வருகிறோம். இந்த வேலியில் பொதுமக்களுக்கு எந்த பாதிப்பும் இல்லாதவாறு நாங்கள் சரியாக பாதுகாத்து வந்தோம். ஆனால் நேற்று அந்த கம்பி வேலி தகர்க்கப்பட்டது. இதனால் இப்பொழுது அந்த இடம் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது. மேலும் பள்ளிக்கும் TASMAC–க்கும் இடைப்பட்ட தூரம் 40 மீட்டர். இதை அகற்றக் கோரி தமிழக அரசுக்கு பலமுறை மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கான ஆதாரங்கள் எங்களிடம் உள்ளது.

மேலும் பள்ளி காம்பவுண்ட் ஒட்டி E.B. Transformer இருப்பதினால் அதை ஒட்டி வரும் மின்கம்பி பள்ளி வாசல் வழியாக சுமார் 50 மீட்டர் நீளத்திற்கு செல்கிறது. அந்த மின்கம்பி தற்போது வெளிப்பக்கமாக தெரிகிறது. தற்போது பள்ளி வளாகத்தின் வாசல் பகுதி பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது.

மேலும் இதை சரிசெய்யவும், மாணவர்களின் நலனுக்காகவும், அரசு இந்த இடத்தை முறையாக பராமரித்தல் சிறப்பாக இருக்கும்.

இல்லையெனில், உங்களின் உத்தரவின்பேரில் நாங்கள் அதனை முன்பு இருந்தபடி சரி செய்யவும் எங்களுக்கு ஆணை வழங்கினால், நாங்கள் அந்த இடத்தை மாணவர்களின் நலன் கருதி பராமரிப்போம் என்பதை மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம். இத்துடன் 4 புகைப்படங்கள் சமர்ப்பிக்கப்படுகிறது."

8. மனுதாரர் தனது குடும்ப நிகழ்ச்சி காரணமாக 06.02.2026 அன்று நடைபெற்ற விசாரணைக்கு கலந்து இயலாது என்று தெரிவித்தன் காரணமாக, மனுதாரர் 06.11.2024 நாளிட்ட முறையீட்டு மனு தொடர்பாக மனுதாரருக்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 06.03.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 10.02.2026 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிர்மனுதாரர்களான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலர் மற்றும் GRT மகாலட்சுமி வித்யாலயா மேல்நிலைப்பள்ளி தாளாளர்/செயலாளர் ஆகியோருக்கு நகல் அனுப்பப்பட்டது.

9. மனுதாரர் 06.03.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"சென்னை–83, அசோக் நகர், கதவு எண் 76, 7வது அவின்யூவில் GRT மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி தளம் ஒன்றிற்கு சுமார் 15,000 சதுரடி என 5 தளத்தில் பல ஆண்டுகளாக இயங்கி வருகிறது. இப்பள்ளியின் முன்பகுதி 7th Avenue சாலையில் உள்ளது. 7th Avenue சாலையில் Gate அமைத்து இப்பள்ளி ஒட்டி உள்ள நடைபாதை சுமார் 15 அகலம் 100 நீளத்தில் இரும்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் நடைபாதையை பயன்படுத்த முடியாமல் சாலையின் நடுவில் நடந்து செல்கிறார்கள். இப்பள்ளியின் விளம்பர போர்டு நடைபாதையை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ளது. 29.05.2023–ல் மாநகராட்சிக்கு புகார் அளிக்கப்பட்டது. EB டிரான்ஸ்பார்மர் எடுக்க 2023–லேயே மனு கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், 20.06.2023–ல் CMDA approval வரைபட அனுமதி பெறப்படவில்லை. இதனால் இப்பள்ளியில் சுமார் 2000ற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் உயிர்களுக்கு தீங்கு ஏற்பட அதிகமான வாய்ப்பு உள்ளது. முதற்கட்ட நடவடிக்கையாக ஆக்கிரமிப்பு செய்துள்ள நடைபாதையை முழுவதுமாக சரிசெய்திடவும், இரண்டாம் கட்ட நடவடிக்கையாக முறையற்ற அனுமதியில்லாமல் உள்ள இப்பள்ளி கட்டிடத்தினை இடித்து CMDA அதிகாரியிடம் முறையாக அனுமதி பெற்று 7th Avenue சாலையில் Gate மற்றும் விளையாட்டு திடல் அமைத்து கட்டிடம் கட்ட உத்தரவிடக் கோரி இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்."

10. முதல் எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் இளநிலை பொறியாளர் 06.03.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"06.02.2026 அன்றைய விசாரணையில் அளித்த வாக்குமூலத்தின் தொடர்ச்சியாக, இன்று (06.03.2026) நடைபெற்ற விசாரணையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துக் கொள்கிறேன்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள 6வது அவென்யூவில் உள்ள GRT பள்ளி வாசலில் நடைபாதையில் உள்ள தோட்ட வேலி அகற்றப்பட்டது. மேற்கண்ட பள்ளிக் கட்டிடம் CMDA approval-படி கட்டப்பட்டுள்ளதா என்பது குறித்து கள ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், EB டிரான்ஸ்பார்மர் தொடர்பாக TANGEDCO–வின் சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் கலந்தாலோசித்து விரைவில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்."

11. இரண்டாம் எதிர்மனுதாரர் GRT மகாலட்சுமி வித்யாலயா மேல்நிலைப்பள்ளி சார்பாக அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் 06.03.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"06.02.2026 அன்றைய விசாரணையில் அளித்த வாக்குமூலத்தின் தொடர்ச்சியாக, இன்று (06.03.2026) நடைபெற்ற விசாரணையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுப் பாதையை எங்கள் பள்ளி உபயோகத்திற்காக, நாங்கள் ஆக்கிரமிப்பு செய்யவில்லை. மாணவர்களின் பாதுகாப்புக்காகவும், பெற்றோர்கள் நலனுக்காகவும், பள்ளி காம்பவுண்ட் சுவர் ஒட்டி உள்ள E.B. Transformer–லிருந்து வரும் மின்கம்பியை தற்பொழுது பாதுகாப்பாக மூடியுள்ளோம்.

மேலும் 2005–ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணையின் வழிகாட்டுதலின்படி, அவசர காலங்களில் தீயணைப்பு வண்டி வந்து செல்வதற்கு ஏதுவாக பள்ளியின் கேட் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், பள்ளிக் கட்டிடத்திற்கான CMDA approval வரைபட அனுமதி ஏற்கனவே பெறப்பட்டு, 30 வருடமாக இப்பள்ளி நடைபெற்று வருகிறது என்பதை

மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

12. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், முதல் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன் செயற்பொறியாளரின் அறிக்கை, இளநிலை பொறியாளரின் வாக்குமூலங்கள் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரரான GRT மகாலட்சுமி வித்யாலயா மேல்நிலைப்பள்ளி சார்பாக அங்கீகரிக்கப்பட்ட பணியாளரின் வாக்குமூலங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

சென்னை–83, அசோக் நகர், கதவு எண் 76, 7வது அவின்யூவில் GRT மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி தளம் ஒன்றிற்கு சுமார் 15,000 சதுரடி என 5 தளங்கள் கட்டப்பட்டு பல ஆண்டுகளாக இயங்கி வருகிறது என்பதும், இப்பள்ளியின் முன்பகுதி 7th Avenue சாலையில் Gate அமைத்து அதனை ஒட்டி உள்ள நடைபாதை சுமார் 15 அடி அகலம் 100 அடி நீளத்தில் இரும்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளதால் அந்நடைபாதையை பொதுமக்களால் பயன்படுத்த முடியாமல் சாலையின் நடுவில் நடந்து செல்வதாகவும், இப்பள்ளியின் விளம்பர போர்டு நடைபாதையை ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என்பதும், இப்பள்ளிக்கு CMDA approval வரைபட அனுமதி பெறப்படவில்லை என்பதால் இப்பள்ளியில் சுமார் 2000ற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் உயிர்களுக்கு தீங்கு ஏற்பட அதிகமான வாய்ப்பு உள்ளது என்பதும், முதற்கட்ட நடவடிக்கையாக ஆக்கிரமிப்பு செய்துள்ள நடைபாதையை முழுவதுமாக சரிசெய்திடவும், இரண்டாம் கட்ட நடவடிக்கையாக முறையற்ற அனுமதியில்லாமல் உள்ள இப்பள்ளி கட்டிடத்தினை இடித்து CMDA அதிகாரியிடம் முறையாக அனுமதி பெற்று 7th Avenue சாலையில் Gate மற்றும் விளையாட்டு திடல் அமைத்து கட்டிடம் கட்ட உத்தரவிடக் கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள 6வது அவென்யூவில் உள்ள GRT பள்ளி கட்டிடம் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் கள ஆய்வு செய்யப்பட்டதில், GRT பள்ளி வாசலில் நடைபாதையில் தோட்ட வேலி ஆக்கிரமித்து கட்டப்பட்டதை கண்டறிந்து பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் அகற்றப்பட்டது என்பதும், விளம்பர பலகை அகற்ற பள்ளி நிர்வாகம் ஒரு வார கால அவகாசம் கோரியுள்ளது என்பதும், CMDA approval-படி மேற்கண்ட பள்ளிக் கட்டிடம் அமைந்துள்ளதா என்பது குறித்து கள ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும், EB டிரான்ஸ்பார்மர் தொடர்பாக TANGEDCO–வின் சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் கலந்தாலோசித்து விரைவில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் செயற்பொறியாளரின் அறிக்கை மற்றும் இளநிலைப் பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

GRT மகாலட்சுமி வித்யாலயா மேல்நிலைப்பள்ளியின் முன்பகுதி 7th Avenue வில் உள்ள பொது நடைபாதை மாணவர்களின் பாதுகாப்புக்காகவும், பெற்றோர்கள் நலனுக்காகவும், மின்சாரக் கம்பியை மூடுவதற்காகவும் பள்ளியின் முன்பு கம்பி வேலியிட்டு அதை சரியாக பராமரிக்கப்பட்டு வருகிறது என்பதும், இந்த வேலியால் பொதுமக்களுக்கு எந்த பாதிப்பும் இல்லாதவாறு சரியாக பாதுகாக்கப்படுகிறது என்பதும், ஆனால் அந்த கம்பி வேலி தகர்க்கப்பட்டதால், அந்த இடம் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பாதுகாப்பு இல்லாமல் உள்ளது என்பதும், பள்ளிக்கு அருகில் உள்ள TASMAC கடையை அகற்றக் கோரி தமிழக அரசுக்கு பலமுறை மனுக்கள் கொடுக்கப்பட்டுள்ளது என்பதும், பள்ளி வளாகத்தின் வாசல் பகுதியில் இருக்கும் E.B. Transformer–லிருந்து வரும் மின்கம்பியியால் பாதுகாப்பு இல்லாததால், தற்பொழுது அதனை பாதுகாப்பாக பள்ளி நிர்வாகத்தினால் மூடப்பட்டுள்ளது என்பதும், 2005–ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணையின் வழிகாட்டுதலின்படி, அவசர காலங்களில் தீயணைப்பு வண்டி வந்து செல்வதற்கு ஏதுவாக பள்ளியின் வாசல் பகுதி (gate) அமைக்கப்பட்டுள்ளது என்பதும்,,

பள்ளிக் கட்டிடத்திற்கான CMDA வரைபட அனுமதி ஏற்கனவே பெறப்பட்டு, 30 வருடமாக இப்பள்ளி நடைபெற்று வருகிறது என்பதும் இரண்டாம் எதிர்மனுதாரரான GRT மகாலட்சுமி வித்யாலயா மேல்நிலைப்பள்ளி சார்பாக அங்கீகரிக்கப்பட்ட பணியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள, சென்னை–83, அசோக் நகர், கதவு எண் 76ல் இயங்கி வரும் GRT மகாலட்சுமி வித்யாலயா மேல்நிலைப்பள்ளியின் 7வது அவின்யூ நுழைவாயிலின் அருகே உள்ள பொதுப்பாதையை ஆக்கிரமித்து தோட்ட வேலி போடப்பட்டதை, பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் கள ஆய்வு செய்யப்பட்டு, அவ்வாக்கிரமிப்பு பெருநகர சென்னை மாநகராட்சியால் அகற்றப்பட்டு விட்டதாகவும், தற்போது மின் கம்பிகள் பாதுகாப்பாக மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தாலும், மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு மின் கம்பிகள் பாதுகாப்பாக மூடப்பட்டுள்ளதை உறுதி செய்திடவும், மேற்கண்ட பள்ளிக்கு முன்பு உள்ள EB டிரான்ஸ்பார்மரை அகற்றுவதற்கு TANGEDCO–வின் சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் கலந்தாலோசிக்கவும், மேற்கண்ட பள்ளியின் கேட் மற்றும் விளம்பர பலகை மாநகராட்சி இடத்தினை ஆக்கிரமிப்பு செய்து அமைக்கப்பட்டுள்ளதா என்பதையும் மேற்கண்ட பள்ளிக் கட்டிடம் CMDA approval-ன்படி கட்டப்பட்டுள்ளதா என்பதையும் பெருநகர சென்னை மாநகராட்சியின் துணை ஆணையர் நிலையில் கள ஆய்வு செய்து அதனடிப்படையில் விரைவில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அவ்வலுவலரை அறிவுறுத்துமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு.கோ. கோவிந்தராஜ்,
எண் 22/43, 15வது தெரு, அசோக் நகர், சென்னை–600 083.

(2) ஆணையர்,பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர், மண்டலம் 10,
பெருநகர சென்னை மாநகராட்சி, 117, என்.எஸ்.கே. சாலை,
கோடம்பாக்கம், சென்னை–600 024.

(4) தாளாளர் / செயலாளர்,
GRT மகாலட்சுமி வித்யாலயாமெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி,
கதவு எண் 76, 7வது அவென்யூ, அசோக் நகர், சென்னை–600 083.

(5) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

16/4/26
செயலாளர்.
15/4/26